பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கடந்த 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 10 திங்கட்கிழமை (26-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 333

எல்லைப்புறப் பாதுகாப்புக்கு விசேட பொலீஸ் அதிகாரிகள்

29 பேர் பதவி உயர்வுடன் நியமனம்

கொழும்பு, அக்டோபர் 26

எல்லைப்புறச் சிங்கள, முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்கும் புதிய திட்டத்தின் கீழ் 29 பொலீஸ் அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பதவி உயர்வுடன் நியமிக்கப்பட்டுள்ள இப் பொலீஸ் அதிகாரிகளுக்கான துரித பயிற்சி நடவடிக்கை ஒன்றும் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கடந்த வியாழன் அன்று பன்னிரண்டு பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு உதவி பொலீஸ் அதிபர் பதவிகளும் — பதினேழு இன்ஸ்பெக்டர்களுக்கு பிரதம இன்ஸ்பெக்டர் பதவிகளும் உடனடியாக வழங்கப்பட்டன.

இவர்களுக்கான விசேட துரித பயிற்சி ஒன்று களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த-எ)

நிவாரணத்துக்கு வந்த கௌபி கால்நடைக்கு!

யாழ்ப்பாணம், அக். 26

கொழும்பில் இருந்து அரசாங்கம் யாழ். மாவட்ட மக்களுக்கு நிவாரணமாக அனுப்பும் பொருள்களில் ஒருபகுதி கால்நடைத் தீவனமாகிறது.

நிவாரணப் பொருள்கள் குறித்து யாழ். செயலகம் சமர்ப்பிக்கும் பட்டியலில் கேட்கப்படாத பொருள்களையும் புனர்வாழ்வு அமைச்சுப்பல் மூலம் அனுப்பி விடுகிறது!!

பட்டியலில் குறிப்பிடப்படாத கௌபி, உழுந்து, அவல் மற்றும் மீன் போன்றவை ஏராளமாக அனுப்பப்பட்டுள்ளன.

அதுவும் உளுந்துப்போன கௌபியை "கட்டி அடித்திருக்கிறது" புனர்வாழ்வு அமைச்சு.

ப. நோ. கூ சங்கங்களில் இந்தக் கௌபி தேடுவாரற்றுக் கிடக்கிறது. சில சங்கங்கள் அதனை மீண்டும் செயலகத்தில் ஒப்படைத்து வருகின்றன.

ஏற்கனவே காலக் கடந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

படை பலத்தை அதிகரிக்க முடிவு

தலைமறைவாகத் திரியும் படையினருக்கு மன்னிப்பு

இராணுவ படைப் பலத்தை அதிகரிப்பது என்று கட்டுப்படைகள் தலைமை அலுவலகம் முடிவு செய்திருக்கிறது.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இத் திட்டத்தின் முதல் கட்டமாக இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர்களையும் — தலைமறைவாகத் திரியும் படையினரையும் மன்னித்துச் சேனைக்குச் சேர்த்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியவருவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

கிளாலி போக்குவரத்து அடிக்கடி ஸ்தம்பிதம்

பயணிகள் பலர் அக்கரையில்!

யாழ்ப்பாணம், அக். 26

கிளாலியூடான படகுச் சேவை அடிக்கடி ஸ்தம்பிதம் அடைவதால் யாழ். நோக்கி வந்த நூற்றுக்கணக்கான பயணிகள் அக்கரையில் — நல்லூர், கிவிநொச்சி பகுதிகளில் தங்கியுள்ளனர்.

படகுச் சேவை தற்போது நாள் தோறும் சீராக நடைபெறுவதில்லை என்றும்—

படையினரின் நாக்குதல்களை அடுத்து குறைந்த எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு சில படகுகளே சேவையிலீடுபடுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்து கொழும்பு செல்லும் பயணிகளில் பலரும் கிளாலி சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர்.

இதேவேளை, கிளாலிப் பாதை தடை செய்யப்பட்டுள்ளதாக ஹெலியில் இருந்து அடிக்கடி அப்பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டு வருவது தெரிந்ததே.

செஞ்சிலுவைச் சங்கத்தின்

நோர்வே அதிகாரி இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், அக். 26

யாழ். மாவட்ட மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிய நோர்வே செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பான திரு. இவான்ஸ் விமானம் மூலம் பளாலி வந்து சேருவார். அவர் அங்கிருந்து காங்கேசன்துறைக்குச் சென்று 'குமண' கப்பல் மூலம், பருத்தித்துறைக்கு வந்து சேருவார்.

இன்று காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்யவிருக்கும் அவர், அங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்து கொள்வார்.

பின்னர் அகதி முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்து அகதிகளின் தேவைகள் பற்றி

(3 ஆம் பக்கம் பார்க்க)

அமைதியான தீபாவளி

யாழ்ப்பாணம், அக். 26

யாழ் குடாநாட்டில் மக்கள் நேற்று தீபாவளிப் பண்டிகையை ஆரவாரமின்றி அமைதியாகக் கொண்டாடினர்.

பட்டாசு வெடிச் சத்தமின்றி — கேளிக்கை வைபவங்கள் இல்லாமல் — இம் முறையும் தீபாவளி அமைதியாகக் கழிந்தது.

கோவில்களில் விசேட பூசை, வழிபாடுகள் நடந்தன. அங்கு பக்தர் கூட்டம் நிரம்பி வழிந்தது. (ஒ-5-68-126)

மாதகலில் தீச்சுவாலை!

சுழிபுரம், அக். 26

மாதகல் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில், பெரும் தீச்சுவாலை கொழுந்து விட்டெரிந்தது.

படையினர் அப்பகுதியில் வீட்டு வேலிகளைத் தீயிட்டு கொளுத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

பறாளை முருகன் கோவிலடியில் இருந்து அவதானித்த போது தீச்சுவாலை எழும்பியதை அவதானிக்க முடிந்தது. (ஒ 28)

மட்டக்களப்புக்கு ஹமில்டன் விஜயம்

கூட்டுப்படைகள் தளபதி தர் ஜெனரல் ஹமில்டன் வன்னிக்கு நேற்று முன்தினம் மட்டக்களப்பு பகுதி முகாம்களுக்கு விஜயம் செய்தார்.

கூட்டுப்படை தலைமையகப் பொறுப்பை மீண்டும் ஏற்றுக்கொண்ட பின்னர் வன்னிக்கு முதற்தடவையாக அதிகாரி விஜயம் செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து அவர் அங்கு படை அதிகாரிகளுடன் விரிவாக ஆராய்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-3)

சு. க. பிக்குகள் சத்தியாக்கிரகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த சுமார் 60 பிக்குகள் அண்மையில் ஒலி பெருக்கி சகிதம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் றொக்மிட்பிளேஸ் இல்லத்தின் முன்னால் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் நடைபெற்ற பிக்குகள் முன்னணியின் கூட்டத்தை செல்லுபடியற்றது என சிறிமா அறிவித்ததை [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா விமானப் படையும் எல்லைப்புறக் காவலில்!

கிழக்கில் எல்லைப்புற கிராமங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா விமானப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அரசு அறிவித்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்புறத்திலுள்ள சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்புக் கடமையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர், துணைப் படையினர், ஊர்காவல் படையினர் மற்றும் பொலீஸார் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது மேலதிகமாக விமானப் படையினரும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்கள, முஸ்லிம் கிராமங்கள் அடிக்கடி தாக்குதல்களுக்கு இலக்காவதால், அப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

பாலையடிவெட்டையில் புலிகள் கடும் தாக்குதல்

கொழும்பு, அக். 26

மட்டக்களப்பு - பாலையடிவெட்டையில் நேற்று தேடுதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

அதனைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படையினர் வான் தாக்குதல்களை நடத்தினர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 30 நிமிடங்கள் வரை அப்பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொட்டுவன்மடு, நெடுங்கேணி ஆகிய இடங்களிலும் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-10)

தமிழ் மக்கள் 100 பேர் மன்னாரில் கைது!

மன்னாரில் கடந்த மாதம் "ஆதிவேக அதிரடி" இராணுவ நடவடிக்கையின்போது, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை கடந்த வியாழக்கிழமை படையினர் சுற்றிவளைத்து நூறுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கைது செய்தனர்.

பெரியகட்டைக்காடு, இலுக்குப்பிட்டி, புதுக்கமம், முருகலைக்குட்டி, காத்தான்குளம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த படையினரும், சமூக விரோத சக்திகளான புளொட், ரெலோ குழுவினரும் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஆண்களையும் வீடுகளில் இருந்த பெண்களையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

குடாநாட்டில் வாந்திபேதி:

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இரு குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாணம், அக். 26

குடாநாட்டில் வாந்திபேதி நோய் மிகத் தீவிரமாக பரவி வருகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட இரு குழந்தைகள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமாயினர்.

இந்நோய் குழந்தைகளையே வெகுவாகப் பாதிக்கிறது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே குழந்தைகள் பலர் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்;

தென்மராட்சியிலும் இந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சிலர் மரணமாகியுள்ளனர்.

கட்டுக்கோப்பாயைச் சேர்ந்த அப்புத்துரை சுகன்யா (வயது 10 மாதம்), வளர்கா வற்றாலையில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை அகதி முகாமில் வசித்து வந்த மாகிலாமணி சுகன்யா (வயது 3 மாதம்) ஆகிய இரு குழந்தைகளுமே நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

மேலும் இருபது குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் இரு குழந்தைகள் ஆபத்தான நிலையில் உள்ளனர். (ஒ-15)

மருதானைச் சம்பவம்:

கறுப்பு வெள்ளி மோதலில் முஸ்லிம் இளைஞர் மரணம்

கொழும்பு, அக். 26

கடந்த வெள்ளிக்கிழமை மருதானை பெரிய பள்ளிவாசல் அருகே முஸ்லிம் இளைஞர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலின்போது முஸ்லிம் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததாக இப்போது தெரிய வந்துள்ளது.

அப்துல் சமத் என்ற இந்த இளைஞர் குட்டுக் காயங்கள் காரணமாக இறந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. ஆனால் பொலீஸார் அதனை மறுத்துள்ளனர்.

கண்ணை இமை காக்கும்
மண்ணை மரம் காக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (சேவல் தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. ஜீவன், மத்திய சந்தை, மானிப்பாய் (5511)

குழந்தைப்பிள்ளை தொப்பி விற்பனைக்குண்டு. க. வேலுப்பிள்ளை, இல. 101, நீதிமன்றக் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (13005)

உடன் விற்பனைக்கு

Hy-Line + prima + Bahira வெள்ளை, சறுப்பு, பிறவுன் பேட்டு குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். "மன் விலாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5514)

சோதிடம்

கல்வியில் சிந்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? ஆமாம் உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். சந்திக்கும் நேரம்: தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை. தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை. த. கிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (22994)

G.C.E. O/L.

கடந்த கால வினா-விடை புத்தகம் சகல பாடங்களுக்கும் குறைந்த விலையில் விற்பனையாகிறது அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (சி 3726)

தரன் ஸ்ருடியோ

குறைந்த சலவர், குறித்த நேரம், தரன் ஸ்ருடியோ, தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சலவித போட்டோ மற்றும் வேலைகளுக்கு. இல. 189, மிஷசார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (22820)

மணமகள் தேவை

கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய (B.Sc.Hons in Computerizing) வெளிநாட்டில் வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். பட்டதாரி விரும்பத்தக்கது. புகைப்படத்துடனும், முழு விவரத்துடனும் விண்ணப்பிக்கவும். திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைத்துச் செல்லப்படும். B. Santhiyapillai. (Retired Postmster) 12, Rajapakse Broadway, Negombo. (23018)

கிளிநொச்சியில் அரிசி தாராளம்

அரியாலை, அக். 26

கொழும்பிலிருந்து பெருமளவு அரிசி தரமார்க்க மாக கிளிநொச்சிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனை அடுத்து கிளிநொச்சிப் பகுதியில் ஒரு கிலோ அரிசி பதினெட்டு ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (த-17)

UNIVERSITY OF JAFFNA

TENDER NOTICE

Tenders are invited for the following from Contractors registered for building works with University of Jaffna or ICTAD.

(a) Repairs / Painting to Balasingam Hall

(b) Repairs/Painting to Physics block.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 27-10-92 — 30-10-92 during office hours upon producing receipt from Bursar, University of Jaffna for the following for each tender.

(a) Refundable deposit - Rs. 2000/-

(b) Non - Refundable deposit Rs. 200/-

Perfected tenders to be sent to reach Registrar, University of Jaffna before 10 00 a m on 12-11-92.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender

- REGISTRAR

University of Jaffna, Thirunelvely, Jaffna

(C-3620)

பற் சிகிச்சை நிலையம்

(கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்)

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பார்வையிடும் நேரம்:

தினசரி பி.ப 4 00—பி.ப.6-00 வரை;
ஞாயிறு மு.ப 10-00—பி.ப.2-00 வரை.

(5520)

கம்பியூட்டர் கல்வி

★ BASIC ★ dBASE III + ★ LOTUS 1-2-3
★ WORD PROCESSING ★ PASCAL
★ COMPUTER TECHNOLOGY

புதிய வகுப்புகள் ஆரம்பம்

28 - 10 - 1992
திங்கள், புதன், வெள்ளி,
31 - 10 - 1992
சனி, ஞாயிறு.

மேலதிக விவரங்களுக்கு,

UNIKCO COMPUTER CENTRE

37, Clock Tower Road, Jaffna.

(சி-3727)

தரவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி (முருகமூர்த்தி) கோவில்

கந்தசஷ்டி விழா

தெய்வீகப் பேருரைகள்

பொருள்: கந்தபுராணம்.

நிகழ்த்துபவர்: திரு.த.சிவகுமாரன் அவர்கள்.
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - ஆலோசகர், காரை நகர் கம்பன் கழகம்.)

நேரம்: தினமும் மாலை
7 00 மணி — 8 00 மணி வரை.

காலம்		பொருள்
26-10-92	—	சிவத்துக்காகத் தவம்.
27-10-92	—	ஐயன் அவதரித்தான்.
28-10-92	—	அண்டங்களை ஆண்ட அவுணர் கோன்.
29-10-92	—	வீரவாகு தேவர் தூது
30-10-92	—	தானவன் மீனமாயினான்.
31-10-92	—	உதயமும் அஸ்தமனமும்.
01-11-92	—	ஸ்ரீவள்ளி திருமணம்.

★ தரமான புடைவைகளுக்கு தவறாமல் நாடுங்கள்.

அன்பளிப்பு:

கணேசன் ஸ்ரோர்ஸ், 201,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(23020)

Spoken English With Grammar

By **Britto**

புதிய பிரிவு ஆரம்பம்:
01 - 11 - 1992
(7 மணி)

புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-3717)

கந்தசஷ்டியை முன்னிட்டு

தெய்வீக தொடர் விரிவுரை

தலம்: நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில்.

காலம்: 26—10—92 திங்கட்கிழமை தொடக்கம்
01—11—92 ஞாயிற்றுக்கிழமை வரை.

நேரம்: 26—10—92 — 30—10—92 வரை மாலை 6-30 முதல் 7-30 வரை.
31—10—92 அன்று மாலை 4-30 — 5-30 வரை.
01—11 92 அன்று மாலை 7-00 — 9 00 வரை.

விடயம்: கந்தர் அநுபூதி.

நிகழ்த்துபவர்: கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள். (அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர்)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

- பரிபாலன சபையினர்.

(5509)

கேள்வி அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணசபை - நிர்மாணத் திணைக்களம்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்களப் பிரதம பொறியியலாளரினால் 1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் விவரம் இடம்	மீளளிக்கப்படாத வைப்புப் பணம்	மீளளிக்கப்படும் வைப்புப் பணம்
அரசினர் வயோதிபர் இல்லமும் உத்தியோகத்தர்கள் வதிவிடமும் திருத்தல் - வாதடி	250/-	1,400/-

ரூபா மூன்று லட்சத்துக்கு (3,00-000) அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு நிர்மாணத் திணைக்களத்திலோ, கட்டடத் திணைக்களத்திலோ அல்லது ICTAD நிதாபனத்திலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் 1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி வைப்புக்கு சமர்பிக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தை ஏதாவதொரு கச்சேரியில் அல்லது நிர்மாணத் திணைக்களம் யாழ்ப்பாண அலுவலகத்தில் வைப்புச் செய்து கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரிட்சிக்க முடியும். அத்துடன் மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:

கட்டடப் பொருள்கள் நட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு தேவையான கட்டட பொருள்கள் வைத்திருப்போர் அல்லது கொள்முதல் செய்யக்கூடியவர்கள் மட்டும் கேள்விகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

எஸ். கே. விநாயகரத்தினம்,
பிரதம பொறியியலாளர்,
வடமாகாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3624)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பில்:	ஆள்பவன் அழிப்பில்:
17	19
—	—
07	10
—	—
1924	1990

அமரர் சபாபதி பரஞ்சோதி

(ஓய்வு பெற்ற, புகையிரத நிலைய அதிபர்)

திதி: பூர்வபக்க பிரதமை 26—10—1992

உயிரைக் காக்க ஓடுகிறேன் என்று சொல்லிப் போன உங்களைப் பாதிவழியில் பாவிகள் குண்டு போட்டு பறித்து விட்டனரோ உம் உயிரை? வாழ்ந்த காலம் முழுவதும் துன்பமற்று, பண்புடனும், கொள்கையுடனும், அன்புடனும் வாழ்ந்து, மறைந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் நின் திருமுகம் எம் கண்ணில் இருந்து அகலாது. இறுதியாத்திரை செல்வதற்கும், இனத்தார் சுற்றம் வலப்பதற்கும் பொறுதியற்ற காலத்தன்னில் பொசுக்கென விட்டெறிந்து போனதேன்?

அன்பு மனைவி,
குடும்பத்தினர்.

ஆமரேசர் வளவு,
மல்லாகம்.

(5410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

அதுவே விவேகம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஒன்றரை லட்சம் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.— இக்கூலை அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்கா வெளியிட்டுக் கிறார்.

இந்தளவு பெரும் எண்ணிக்கையான துருப்புகளைப் போரில் ஈடுபடுத்தியும், இரண்டரை வருடங்களாகக் கடும் யுத்தம் தொடுத்தும் வடக்கு-கிழக்குப் போரில் அரசினால் இன்னும் வெல்லமுடியவில்லை.

வடபகுதியில் அரசின் ஆட்சி ஆணைமுற்றாகச் செயலிழந்து போயிற்று; செல்லுபடியாகாமற் போயிற்று; சில பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த போதிலும் அங்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே வாழ்கிறார்கள்.

கிழக்கிலும், பிரதான நகரப் பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டிருந்த போதிலும் அங்கும் அரச ஆட்சி ஆணைமுற்றாக, முழுமையாக செயற்படுவதாகச் சொல்லமுடியாது. இராணுவ நிலையிலும் அவ்வாறே. கிழக்கை மட்டுமன்றி கிழக்கின் எல்லைப் பகுதிகளையும் காப்பாற்ற முடியாத நிலையில் அரசாங்கம் கஷ்டப்படுகிறது.

இது தான் உண்மையான தள நிலைமை. இந்தச் சூழலில், தமிழர்களை இன அழிப்புச் செய்தால் அன்றி, இராணுவத் தீர்வின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியாது.

எனினும் போரை நிறுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. ஆயுதப்படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலேயே அது ஆர்வம் காட்டுகிறது. அதன் பொருட்டு பயத்தினால் படையை விட்டுவிட்டு ஓடியவர்களை தண்டனை, நிபந்தனை இன்றி மீண்டும் சேர்த்துக்கொள்ளத் தயாராகிறது. படையில் சேர்வதற்கான தகைமைகளைக் குறைத்துப் பார்க்கிறது.

ஆயினும் ஆயுதப்படையில் சேர்ந்து தமது உயிரைப் பலியிடச் சிங்கள இளைஞர்கள் விரும்பவில்லை. அவர்களது பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் போர்க்களம் சென்று பிணங்களாகப் பெட்டிகளில் வருவதை விரும்பவில்லை.

எனினும் அரசு தனது முடிவை மாற்றியதாக இல்லை. வழமையான தகைமைகளுடன் தேசப்பற்றுள்ள சிங்கள இளைஞர்களை ஆயுதப்படைகளில் சேருமாறு கூட விளம்பரப்படுத்துகிறது. ஆனால் நேர்முகப் பரீட்சைகளுக்குச் சமுகமளிப்போர் இரண்டு அல்லது மூன்று தான் எண்ணிக்கையாமே!

இதிலிருந்தாவது அரசு பாடம் படிக்கவில்லை, தமது மண்ணை மீட்டுச் சுதந்திரம் பெற வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் போராடும் தமிழ் இளைஞர்களுக்கும், உயிருக்கு அஞ்சிப் படையில் சேரப் பின்னிற்கும் சிங்கள இளைஞருக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை உணர்ந்ததாக இல்லை.

அதுமட்டுமல்ல ஓர் அரசாங்கம் தனது சகல வளங்களையும் திரட்டி, நவீன ஆயுத வசதிகளுடன் இரண்டரை வருடங்களாகச் சமர்புரிந்தும் யுத்தத்தில் வெல்லமுடியவில்லை. அதாவது தோல்வி கண்டுள்ளது. இந்நிலையில் யுத்தத்தை நிறுத்திக்கொள்வது தான் உகந்தது. யுத்தத்தை நிறுத்துவது வெட்கம் அல்லது அவமரியாதை என்று அரசு எண்ணினால் அரசாங்கமும், ஜனாதிபதியும் ராஜினாமாச் செய்தாக வேண்டும்.

அரசும் ஜனாதிபதியும் சனநாயக மரபுகளை மதித்து ராஜினாமாச் செய்யும் பட்சத்தில், இராணுவ அரசு ஒன்று உருவாகும் சாத்தியம் பெரிதும் உண்டு. அது சிங்களவருக்கும் பேராபத்தை விளைவிக்கும்; தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்திலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்து போரை ஓய்வுக்குக் கொண்டு வந்து அரசியல் தீர்வு வழி செல்வதே விவேகமானதாகும்.

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 26

"இலங்கையில் பயிலுநர் ஆசிரியர்களின் சட்டரீதியான அந்தஸ்து" எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், பிரற்றிக் ஈபேர்ட் மன்றம், சரிநேச சுதந்திர ஆசிரியர்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளன. (உ-3)

திறமையாகச் சித்தி எய்திய மாணவர் கொழும்புக் கருத்தரங்குக்கு அழைப்பு

ஆனால் போக்குவரத்து வசதியில்லை

யாழ்ப்பாணம், அக். 26

இம் மாதம் 29, 30 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் "இன்போடெல் 93" கருத்தரங்கும் கண்காட்சியிலும் கலந்து கொள்ள யாழ் மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 13 மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு துறைகளில் ஈடுபட்டுள்ள முதற்தர வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களினதும் உரிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் வைத்தொழில், விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சுக்கள் கூட்டாக இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

1991 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற நாடெங்கிலுமுள்ள 2 ஆயிரத்து 100 மாணவர்கள் இந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளை ஆறு கல்வி வலயங்களாப் பிரித்து ஒவ்வொரு வலயத்திலிருந்தும் 300 மாணவர்களும் — நாடெங்கிலுமிருந்து அதியுயர் புள்ளிகளைப் பெற்ற 300 மாணவர்கள் என்ற அடிப்படையிலும் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி வடக்கு - கிழக்கு மாகாணம் வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியிற் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்வதில் போக்குவரத்து கிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்புக்கான போக்குவரத்து வசதிகள் பாதுகாப்பானதாக இல்லாததால் மாணவர்களை அழைத்துச் செல்ல ஆசிரியர்கள் பின்விப்பதாக அறியப்படுகிறது.

கொழும்புக் கருத்தரங்கில் நவீன தகவல் தொழில் நுட்பம், தொடர்புத்துறை, கணனி இலத்திரனியல் தொடர்புத் துறை குரிய நவீன தொழில் நுட்பம் போன்ற விடயங்கள் இடம் பெறும்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு:-

அஜித்சந்திராசன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), கிவதர்சினி சதாசிவம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ரட்ணகிரிதம் ராதிகா (மானிப்பாய் மெதோடிஸ்ட் கல்லூரி), குணரட்ணம் ஜெயந்தினி, கோபி ரமணன் சோயாந்த ரஞ்சினி, ராஜரட்ணம் மேகலா (உடுவில் மகளிர் கல்லூரி), செல்வலிங்கம் செந்தில்குமரன், நடராஜ் சந்திரிகா, கதிரவேற்பிள்ளை கதர்சனா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), திருச்செல்வம் ஹரிஹரன், தங்கராஜ் திருமுருகன், குணரத்தினம் சூரியகுமார், செல்வரத்தினம் அறிவன் (ஹாட்லிக் கல்லூரி).

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் இத்தகைய கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

கந்தசஷ்டி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், அக். 26

கந்தசஷ்டி விழா இன்று முதல் நாடெங்கிலுள்ள பல ஆலயங்களிலும் ஆரம்பமாகிறது.

நல்லூர் கந்தன் ஆலயம், மற்றும் உடுவில் முருகமூர்த்தி கோவில், கல்வளம் அருள்மிகு கந்தசாமி கோவில், கொண்டாவில் வடக்கு திக்கரம்பதி சிறி சிவகாமி அம்பாள் ஆலயம், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், யாழ் வண்ணைநகர் மணிக்கூண்டு வீதி ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயம் உட்பட்ட பல கோவில்களில் இன்று கந்தசஷ்டி விழா ஆரம்பமாகிறது.

★ ★ ★

சங்கானை வெள்ளிக் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இன்று சங்காபிஷேகம் நடைபெற்று தினமும் லட்ச நாமார்ச்சனையும், லட்சஹோமமும் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் கந்தசுவாமி கோவிலிற் தீர்த்தக்கேணி மண்டபத்தில் திருச்செந்தூர் புராண படனம் வழமை போல நடைபெறும்.

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவிலில் கந்தசஷ்டியை முன்னிட்டு இன்று தொடக்கம் தெய்வீகத் தொடர் விரிவுரை நடைபெறும்.

★ ★ ★

"கந்தர் அநுபூதி" என்னும் பொருளில் அகில இலங்கை கம்பன் கழகத்தைப் பிரதிநிதித்து இ. ஜெயராஜ் தெய்வீக விரிவுரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானத்தில் இன்று முதல் கொடியேற்றத்துடன் கந்தசஷ்டி விழா ஆரம்பமாகும். வெள்ளி இழமை திருப்பெரும் வடிவக் காட்சி, சனிக்கிழமை வேல் வழங்கும் காட்சி என்பன சிறப்புக் திருவிழாக்களாக நடைபெறும்.

★ ★ ★

தாவடி, ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு இன்று தொடக்கம் தெய்வீகப் பேருரைகள் நடைபெறவுள்ளன.

காரைநகர் கம்பன் கழக ஆலோசகர் திரு. த. சிவகுமாரன் இரவு 7 மணி முதல் 8 மணிவரை கந்தபுராணம் பற்றிப் பேருரைகள் நிகழ்த்துவார்.

★ ★ ★

கந்தசஷ்டிவிரத முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் இன்று முதல் தினமும் பிற்பகல் 2.15 இற்கு "முருகன் பெருமை" என்ற பொருளில் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சொற்பொழிவாற்றுவார்.

இனப்பிரச்சினைக்கு வருட இறுதிக்குள் தீர்வு காணலாம்

தெரிவுக்குழு நம்பிக்கை

கொழும்பு, அக். 26

இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வு இந்த வருட இறுதிக்குள் காண முடியும் என்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைமைப்பீடம் கருதுகிறது.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க சமீபத்தில் தமிழ்க் கட்சிகளிடம் சமர்ப்பித்த யோசனைத் திட்டம் ஒன்றை, அக் கட்சிகள் நிராகரித்திருந்த போதிலும் இந்த ஆண்டின் இறுதிக்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் ஆரோக்கியமான உடன்பாடு ஒன்றைக் கொண்டு வர முடியும் என்று நாடாளுமன்றத் தெரிவுக் குழு கருதுவதாக வெளியிட்டுள்ளதாக கொழும்புச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய யோசனைகளை தெரிவுக்குழு சமர்ப்பிக்கும்

கொழும்பு, அக். 26

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய யோசனைகளைச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க சமீபத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக புதிய யோசனை ஒன்றை கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளிடம் சமர்ப்பித்திருந்தார்.

தாக ஏகோபித்த முறையில் சமர்ப்பித்த நான்கு அம்சத் திட்டத்தின் யோசனைகளைப் பிரதிபலிப்பவைகளாக மங்கள முனசிங்கவின் யோசனைகள் காணப்படவில்லை என்று கூறி அவற்றை ஏழு தமிழ்க் கட்சிகளும் நிராகரித்து விட்டன.

இப்போது புதிய யோசனைகளை தெரிவுக் குழுத் தலைவர் சமர்ப்பிக்கவிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. (த-ஏ)

பௌதீகவியல் மீள் பரீட்சை இன்று 23 நிலையங்களில்

யாழ்ப்பாணம், அக். 26

கடந்த ஆவணியில் நடந்த ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சையின் பௌதிகவியல்-II பாடத்துக்கான மீள் பரீட்சை யாழ். மாவட்டத்தில் 23 பரீட்சை நிலையங்களில் இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருப்பதாக யாழ். கல்வி அலுவலக பரீட்சைப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையில் விடைத்தாள்கள் வார இறுதியில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்பகுதியில் [illegible] நடைபெறுவதற்கு முன்னரே பௌதிகவியல் [illegible] வினாத்தாள் வெளியானதைத் தொடர்ந்தே நாடு முழுவதிலும் இந்தப் பாடத்துக்கு மீள் பரீட்சை இன்று நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

நோர்வே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளைகளைக் கேட்டறிவார்.

இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் திரு. இவான்ஸ் டோநாட்டில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிடுவதுடன், அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவார்.

திரு. இவான்ஸ் [illegible] இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் [illegible] மையப் பிரதிநிதிகளும் வரு[illegible] (த-5)

அமெரிக்க ரொக்கெட் வெடித்துச் சிதறியது!

வாஷிங்டன், அக். 26

பரீட்சார்த்த ரொக்கெட் ஒன்று நடுவானில் வெடித்துச் சிதறியதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் நட்சத்திரப் போர் ஆயுதத் திட்டத்துக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நடத்தப்பட்ட மூன்று ரொக்கெட் பரிசோதனைகளில் ஏற்பட்ட இரண்டாவது தோல்வி இது என்று நாஸா ஆராய்ச்சி நிலைய நிபுணர்கள் தெரிவித்தனர்.

பிற்பகல் மூன்றாவது மணி சோதனை வேளையில் உள்ள தீவு ஒன்றில் அமைந்து இருக்கும் நாஸா விண்வெளி நிலையத்தில் நடத்த விமானம் நடத்தப்பட்டது. ரொக்கெட் ஏவப்பட்ட 55 வினாடிகளில் அது நடு வானில் வெடித்துச் சிதறியது. (உ-எ)

கர்நாடக காங்கிரஸில் உட்கட்சிச் சண்டை!

பெங்களூர், அக். 26

கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸ் அரசில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சர் பங்காரப்பாவின் போக்குப் பிடிக்காத தினால் பதவி விலகிய மாநில அமைச்சர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மூன்று மாநில அமைச்சர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை ஆளுநரிடம் நேரடியாகச் சமர்ப்பித்திருந்தனர்.

மேலும் இரண்டு அமைச்சர்கள் நேற்று தமது பதவி விலகல் கடிதங்களை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தனர்.

இதேவேளை — தம்மைப் பதவி நீக்கஞ் செய்வதற்கு காங்கிரஸ் தலைமைப் பீடம் நடவடிக்கை எடுப்பின் அது பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் —

அவற்றை எதிர்கொள்ள காங்கிரஸ் தலைமைப்பீடம் தயாராக இருக்க வேண்டும் என்றும் திரு. பங்காரப்பா எச்சரித்திருக்கிறார். (உ-எ)

பரிசீலனை

நவாலி, அக். 26

தற்காலிக எழுதுவினைஞர்களாக நிரந்தரம் பெறாமல் யாழ். மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களில் பணிபுரிபவர்களை நிரந்தரமாக்குவதற்கென அவர்களது தகைமைச் சான்றிதழ்கள் தற்போது பரிசீலனை செய்யப்படுகின்றன. (த-100)

கூடுதல் அரச அதிகாரிகள் கப்பலில் செல்ல வசதி

யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோக ரீதியாக அவசர வேலையாக கொழும்பு செல்ல வேண்டிய அரச அதிகாரிகளைக் கூடுதல் எண்ணிக்கையில் கப்பலில் அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த முப்பதாம் திகதி கொழும்பில் நடந்த புனர்வாழ்வு சம்பந்தமான மாநாடு ஒன்றுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அரச அதிகாரிகள் கப்பல் மூலம் கொழும்பு வருவதற்கு கூட்டுப் படையினரின் அனுமதி பெறுவதில் உள்ள நடைமுறை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி ராஜரட்ணம், அரச அதிகாரிகள் கப்பலில் வருவதற்கு கூட்டுப் படையினர் தடை விதிக்கவில்லை என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கூட்டுப் படையினரின் அனுமதி பெறாமலேயே அரச அதிகாரிகளைக் கப்பலில் ஏற்றி வரலாம் என்றும் கூறினாராம்.

இது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் அதிகாரிகளிடம் விசாரித்தபோது—

கூடுதலான அரச ஊழியர்களை 'குமண' கப்பல் மூலம் அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்—

கூட்டுப்படை தலைமையகத்தில் அனுமதி பெறும் நடைமுறையில் மாற்றம் ஏதும் இல்லை என்றும் பதிலளிக்கப்பட்டது.

எதிர்வரும் 30 ஆம் திகதி திருமலை செல்லும் 'குமண' கப்பலில் வழமையை விடக் கூடுதல் எண்ணிக்கையான அரச அதிகாரிகள் அழைத்துச் செல்லப்பட இருக்கின்றனர் என்றுக் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி.சீ.ஈ. சாதாரணதர

முன்னோடிப் பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 26

ஜி. சீ. ஈ. (சாதாரண தர) முன்னோடிப் பரீட்சைகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றன.

147 பரீட்சை நிலையங்களில் நடக்கும் இந்தப் பரீட்சையில் 17 ஆயிரத்து 232 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 109 பரீட்சை நிலையங்களில் 13 ஆயிரத்து 378 மாணவர்களும்—

கிளிநொச்சி மாவட்டத்தில் 16 பரீட்சை நிலையங்களில் ஆயிரத்து 402 மாணவர்களும்—

முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பரீட்சை நிலையங்களில் ஆயிரத்து 427 மாணவர்களும்—

வவுனியா மாவட்டத்தில் ஆறு பரீட்சை நிலையங்களில் 582 மாணவர்களும்—

மன்னார் மாவட்டத்தில் 4 பரீட்சை நிலையங்களில் 443 மாணவர்களும் — தோற்றுகின்றனர்.

இப்பரீட்சையில் கிழக்கு மாகாணமும் மாணவர்களே 93 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. (உயர் தர) வகுப்புக்கு அனுமதிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

ஆசிரியர்களுக்கு வீடமைப்பு கடன் திட்டம் அறிமுகம்

கொழும்பு, அக். 26

அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன ஆசிரியர்களுக்காக வீடமைப்புக் கடன் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தி இருக்கிறது

அரசாங்கப்பாடசாலைகள், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள், பிரிவினாக்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது வழமையை விட இரண்டு சதவீத குறைந்த வட்டியுடன் இக் கடன் வழங்கப்படும்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் கிறிசேன கரேயின் வழிகாட்டுதலுக்கு அமைய ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்புரையின் கீழ் இத்திட்டம் அமுல் செய்யப்படுவதாக அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் முகாமைப்பணிப்பாளர் இ. எல். மேத்தானந்தா தெரிவித்தார்.

25 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் தவணை அடிப்படையில் செலுத்தக் கூடிய வகையில் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கல்விச் சேவையில் உள்ள ஏனைய நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் வீடமைப்புக் கடன் வசதிகள் வழங்கப்படவிருப்பதாக அவர் மேலும் கூறினார். (த-எ)

உயிர் பாதுகாப்பு வாரம் அறிவிக்கக் கோரிக்கை

கத்தசஷ்டி வாரத்தை உலக உயிர்ப்பாதுகாப்பு வாரமாகக் கொள்ளுமாறும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுள்ளது.

உலகில் தோன்றியுள்ள அமைதியின்மையை அகற்றி அமைதியை ஏற்படுத்த இவ்வருடத்தில் இன்று தொடக்கம் 26 ஆம் திகதி வரையான ஒரு வாரத்தை உயிர்ப் பாதுகாப்பு வாரமாக அறிவிக்குமாறு இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியிட்ட மகஜர் மூலம் இந்து இளைஞர் பேரவை ஐ. நா. செயலாளரைக் கேட்டிருந்தது.

ஐ. நா. செயலாளருக்கு அனுப்பப்பட்ட மகஜரின் பிரதிகள் கொழும்பில் உள்ள உலக நாடுகளின் தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

சகல சமய மக்களும் கொல்லாமை, புலால் மறுத்தல், ஆநிரையைப் போற்றுதல் முதலியவற்றின் ஊடாக உலகு சமுதாயம் சிரகடைய உதவ வேண்டும் என்றும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (ஆ-30)

90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்	மறைவு
24	26
—	—
11	07
—	—
1912	1992

கொழும்பில் சிவபதமடைந்த
அமரர்
சங்கரப்பிள்ளை இராசரெத்தினம்
(வர்த்தகர், 62, கே. கே. எஸ். வீதி, பெரியகடை யாழ்ப்பாணம்)

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய் குடும்ப ஒளி விளக்காய், அந்தி பகலாய் அயராது உழைத்து எம்மை ஆளாக்கி வாழ்வித்த அன்புத் தெய்வமே!

"நினைந்து நினைந்து இறைஞ்சுவோம்"

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

11/5, கச்சேரி ஒழுங்கை,
பண்டிதன்தாழ்வு,
யாழ்ப்பாணம். (23014)

'இணையம்' அமைத்து வரும் கொட்டகைகளில்

பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கே முன்னுரிமை

வன்னார்பண்ணை, அக். 26

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அமைத்து வரும் கொட்டகைகளில்—பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்த முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருப்பதால் அவை ஒழுங்காக இயங்க முடியாமல் இருப்பதாலும்—

கில பாடசாலைகள் தனி வீடுகள், மற்றும் கட்டடங்களில் இயங்கி வருவதாலும் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டே அண்மையில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், சோப்பாய் ஆகிய உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளில் மொத்தம் ஆயிரத்து 306 குடும்பங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்தவர்கள் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். (த-162)

வெடிவிபத்தில் 25 பேர் பலி!

புதுடில்லி, அக். 26

பீஹார் மாநிலத்தில் நேற்று மாலை பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் வரையில் கொல்லப்பட்டார்கள்.

கட்டடம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (உ-10)

வலி. வடக்கில் ஹெலி நோட்டம்

தெல்லிப்பளை, அக். 26

வலி. வடக்குப் பகுதிகளில் நேற்றுக் காலை 8 30 மணியளவில் ஹெலி சுற்றி வந்து பறந்து நோட்டமிட்டது.

மக்கள் பீதியடைந்த போதும் விபரீதம் ஏதும் நிகழவில்லை. (ஒ-68)

சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், அக். 26

கடந்த 24 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சியில் கலந்து கொள்ளாத யாழ், வேலணைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நாளை மறுதினம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் சேவைக்காலப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை: நியாகராஜா அறிவித்துள்ளார். (உ-5)

மாகாண கல்வி அமைச்சு விவரம் கோரிப்பு

உடுவில், அக். 26

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள், கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் நிரந்தரமற்ற ஊழியர்கள், காவலாளிகள், தொழிலாளர்களை நிரந்தர ஊழியர்களாக நியமிக்க வேண்டிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

1992 ஜனவரி 15 ஆம் திகதி வரை அவர்கள் நியமனம் பெற்ற திகதியில் இருந்து இவர்கள் சேவையாற்றி இருக்க வேண்டும் தொடர்ச்சியான சேவையினை உடையவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர். (த-152)

ஜெயலலிதா கட்சி எம். எல். ஏ காலமானார்

சென்னை, அக். 26

அ. தி. மு. க வின் எம். எல். ஏயான வேணுகோபால் (வயது 55) கடந்த சனியன்று இரவு மாரடைப்பினால் காலமானார்.

தற்போதைய தமிழ்நாடு சட்ட சபையில் ராணிப் பேட்டை தொகுதி உறுப்பினராக அவர் இருந்து வந்தார். (ஒ-எ)

நிவாரணத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்மா பக்கட்டுகள் அனுப்பப்பட்டிருந்தன என்பதும்—

அவற்றில் ஒரு தொகுதி அழிக்கப்பட்டதும், ஏனையவை காக்நட் தீவனமாகப் பயன்படுத்தப்பட்டதும் தெரிந்தவையே.

உரூத்துவோன கெனபிஸ காக்நட்டத் தீவனமாக வழங்க வேண்டிய [illegible] மாவட்டாரிகள் தெரிவித்த [illegible]

இப்பத்திரிகை நியூ உதயன் லிமிடெட் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-10-92 [illegible] வெளியிடப்பெற்றது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான யாழ். மாணவர் அனுமதி இழப்பர்?

யாழ்ப்பாணம், அக். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தமது அனுமதியை இழக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான பதிவுகள் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டன.

மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் தமது பதிவை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அந்தந்த பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களுக்கு குறிப்பிட்ட திகதிக்கு முன் அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் பலருக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும்—

இதன் காரணமாகவே மாணவர்கள் தமது தெரிவை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் தகுதி பெற்ற மாணவர்கள் தம்மை பதிவு செய்து கொள்வதற்கான விருப்பத்தை உடனடியாக தபால் மூலம் அவ்வப் பல்கலைக் கழக பதிவாளர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

(தங்கோடை - காரைநகர்)

இவர் காஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அருமை மனைவியும், திருமதி காமாட்சி சுப்பிரமணியம் (கனடா), திருமதி பரமேஸ்வரி மகேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி அன்னபூரணம் கோவிந்தபிள்ளை ஆகியோரின் தாயாரும், வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (கனடா), கனகபிரப்பிள்ளை மகேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி), ஆறுமுகம் கோவிந்தபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம்) இளங்கவின் அன்பு மாமியாரும், தேவசகாயம்பிள்ளை (அமெரிக்கா), கணேசமூர்த்தி (கனடா), செல்வநாயகம் (கனடா), செல்வநாயகி (கனடா), பத்மசுகோசனா, (கனடா), இராசகலோசனா (கனடா), நிரஞ்சன் (கேம்பிறிஜ் பல்கலைக் கழகம்), நிர்மலன் (லவத்திய கலாநிதி கொழும்பு), நிருத்தன் (கணக்காளர் - கொழும்பு), குமரன் (மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி) இவர்களின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 71, செட்டித்தெரு நல்லூரில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்;
71, செட்டித்தெரு, இ. ஆ. கோவிந்தபிள்ளை
நல்லூர். (மருமகன்)
(23023)

திருமதி ராணி பாலசிங்கம் (மம்மி)

திருமதி ராணி பாலசிங்கம் அவர்கள் 22-10-1992 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் அன்றூசாள்ஸ் (ரமேஸ் பிரான்ஸ்), திருமதி சுமதி ஸ்ரனிஸ்லாஸ் (ஆசிரியை, புனித. பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு: கி ஸ்ரனிஸ்லாஸ் (ஆசிரியர், புனித. பத்திரிசியார் கல்லூரி), திருமதி மலர்விழி சாள்ஸ் (ஆசிரியை, மட்டக்களப்பு மகளிர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
- குடும்பத்தினர்.

3, மருதடி வீதி,
கண்டிக்குளி
யாழ்ப்பாணம். (23021)

திருமதி கந்தப்பிள்ளை சரஸ்வதி

(சரசு)

பளாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது மட்டுவில் தெற்கில் வசித்து வந்த திருமதி கந்தப்பிள்ளை - சரஸ்வதி காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளையின் அன்பு மனைவியும், நடராசலிங்கம், காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி, சுந்தரலிங்கம், சுப்பிரமணியம் (பஞ்சலிங்கம்), கிவலிங்கம், அமிர்தலிங்கம், ஈஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26-10-92 திங்கட்கிழமை 1 மணியளவில் மட்டுவில் தெற்கு மயானத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மட்டுவில் தெற்கு, அமிர்தலிங்கம்
சாவகச்சேரி. (மகன்)
(23022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org